**In the court of the Judicial Magistrate No.I, Kovilpatti**
Deposition of Witness
CC. No. 80/2013

பெயர் - சத்தியமூர்த்தி (PW.1 )

23-02-2018 முதல் விசாரணை : (சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)
நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை -1ஆக பகுதி அலுவலகம் சூலூரில் கோவை மாவட்டத்தில் பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 18.09.2008 தேதியில் கோவில்பட்டியில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை -1ஆக பணியில் சேர்ந்தேன். பணியில் இருக்கும் போது கடந்த 21.04.10 தேதியில் கோவில்பட்டி புதுஅப்பனேரியை சேர்ந்த அச்சயராமானுஜம் என்பவர் கேஎ 03 MH 4050 என்ற ஸ்கார்ப்பியோ காரினை மறுபதிவு செய்வதற்காக பகுதி அலுவலகத்தில் சமர்ப்பித்தார். ஆவணங்களை ஆய்வு செய்தேன். ஆவணங்களை ஆய்வு செய்தபோது அவர் கொடுத்த பதிவுச்சான்று மற்றும் படிவம் 28 அவற்றில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை ஆய்வு செய்தேன். பதிவுச்சான்றினை ஆய்வு செய்த போது பதிவுச்சான்றில் ஸ்கார்பியோ டீலக்ஸ் என்ற வார்த்தைக்கு பதிலாக ஸ ார்பியோ டீஎக்ஸ் என்றும் வாகனத்தின் தயாரிப்பாளர் மகேந்திரா அன்டு மகேந்திரா என்ற வார்த்தைகள் ஆங்கிலத்தில் தவறுதலாக கணினியில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த பதிவுச்சான்றில் இருந்ததை கண்டுபிடித்தேன். எங்களுடைய அலுவலகத்தில் பொதுவாக இதுபோன்ற வாகன தயாரிப்பாளர் பெயர், மற்றும் வாகனத்தின் வகை முதலியவை தவறுதலாக கணினியில் பதிவு செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதன் பேரில் எனக்கு முதலில் இந்த வாகனம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலீயானதாக இருக்கும் என்ற சந்தேகம் எழுந்தது. எனவே மேற்படி அச்சயராமானுஜம் அவர்களை கர்நாடக மாநில வாகனமாக உள்ளது இந்த வாகனத்தினை எவ்வாறு எந்த வகையில் அங்கிருந்து இங்கு எடுத்து வந்தீர்கள் என்று கேட்ட போது எனது உறவினர்கள் பெங்களூரில் இருப்பதால் அங்கிருந்து இந்த வாகனத்தினை மற்றும் ஆவணங்களை வாங்கி வந்து இங்கு மறுபதிவு செய்வதற்கு சமர்ப்பிப்பதாக கூறினார். எனவே எனக்கு ஏற்பட்ட மேலே குறிப்பிட்ட சந்தேகங்களை தெளிவு செய்வதற்காக மேற்படி வாகனத்தின் பதிவெண் பதிவு செய்யப்பட்ட கர்நாடக மாநில வட்டார போக்குவரத்து அலுவலகம் பெங்களூர் கிழக்கு அலுவலத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலரிடம்இது போன்று மறுபதிவு செய்வதற்கு வாகனம் கேஎ 03 MH 4050 என்ற வாகனத்தின் அடிசட்ட எண் மற்றும் பொறிஎண் இவற்றினை தெரிவித்து இந்த வாகனம் எந்தவித வாகனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கேட்ட போது மேற்படி வாகனம் பதிவெண் மாருதி 800 காராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் நான் குறிப்பிட்டு கேட்ட அடிசட்ட எண் மற்றும் பொறி எண் சம்பந்தப்பட்ட மேலே கேட்கப்பட்ட வாகனத்திற்கு உரியது அல்ல என்றும் தெரிவித்தார். எனவே நான் மின் அஞ்சல் மூலமாக மேற்படி அலுவலகத்திற்கு வேண்டுகோள் விடுத்து அவர்களிடம் இருந்து மேற்படி வாகனத்திற்கு உரிய விபரங்கள் பெற்றேன். மேலும் இதே நபர் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு இதே போன்ற ஒரு ஸ்கார்பியோ காரினை டி.என் 69 ஆர் 8689 என்று பதிவு செய்திருந்ததால் சம்பந்தப்பட்ட வாகனத்திற்கு மின் அஞ்சல் மூலம் மேற்படி வாகனத்திற்கு விபரங்கள் கோரியபோது அவ்வாறு மறுபதிவு செய்யப்பட்ட வாகனமும் மாருதி 800 கார் என்றும் எங்களது அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட பதிவு சான்றுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது அடிசட்ட எண் மற்றும் பொறி எண் மற்றும் வாகன வகை பொருந்தாமல் இருந்தது தெரியவந்தது. மேலும் கேஎ 03 MH 4050 என்ற வாகனத்தின் பெறப்பட்ட மின்அஞ்சல் கடிதத்தில் மேற்படி வாகனத்தின் உண்மையான அசல் அடிசட்ட எண் மற்றும் பொறி எண்ணை வைத்து அந்த வாகனம் வேறொரு வாகனமாக கர்நாடக மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வாகனம் காணாமல் போனதற்கான புகார் பதிவு செய்யப்பட்டு அதனுடைய பி பதிவேட்டு நகல் மின்அஞ்சல் மூலம் கிடைக்கப்பட்டது. எனவே எங்கள் அலுவலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வாகனம் தவறுதலான வாகனம். கர்நாடக மாநிலத்தில் திருடு போய்யுள்ளது என்பதை உறுதி செய்து அதன் பிறகு மேற்படி வாகனத்தினை 28.04.10 தேதியில் வாகன சோதனையின் போது மேற்படி மறுபதிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கேஎ 03 MH 4050 என்ற

WEB COPY

வாகனத்தையும் டி என் 69 ஆர் 8687 என்ற ஸ்கார்பியோ காரினையும் வாகன சிறைபிடிப்பு அறிக்கை மற்றும் சோதனை அறிக்கை வழங்கி மேற்படி இரு வாகனங்களையும் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக புகார் ஒன்றினையும் காவல் ஆய்வாளர் கோவில்பட்டி கிழக்கு அவர்களுக்கு தபால் மூலமாக அனுபபி வைத்தேன். மேலும் எங்களது அலுவலக ஆவணங்களை ஆய்வு செய்தபோது அட்சயராமானுஜம் என்பவரது மகன் கிருஷ்ணமூர்த்தி என்பவரது பெயரில் மறுபதிவு செய்யப்பட்ட ஸ்கார்பியோ கார் டிஎன் 69 ஏஇசட் 0277 என்ற வாகனத்தையும் ஆய்வின் போது 06.05.10 தேதியில் சிறைபிடித்து மேற்படி வாகனமும் மின்அஞ்சல் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட கர்நாடக மாநில பதிவு சான்றுடன் கொடுக்கப்பட்ட வாகன வகை மற்றும் வாகனம் தவறுதலாக இருந்ததால் மேற்படி கொடுக்கப்பட்ட ஆவணங்கள் பேர்லீயானது என்பதை உறுதி செய்து மேற்படி வாகனத்தையும் சிறைபிடித்து கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இதற்கிடையில் 30.04.10 தேதியில் முதல் தகவல் அறிக்கை கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் 262-10 என்ற குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதன்பின்னர் கோவில்பட்டி கிழக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையில் மேற்படி போலீயாக எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட நான் சிறைபிடித்த 3 ஸ்கார்பியோ கார்களை தவிர மற்றும் ஒரு ஸ்கார்பியோ கார் 3 டாடா கனரக வாகனங்கள், ஒரு டொயோட்டா குவாலிஸ் வாகனம் மற்றும் ஒரு மாருதி 800 கார் ஆக மொத்தம் 9 வாகனங்கள் சிறைப்பிடிக்கப்பட்டு கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த வழக்கு தூத்துக்குடி குற்ற பிரிவு காவல் ஆய்வாளருக்கு மாற்றப்பட்டது. மேலும் இது சம்பந்தமாக இந்த வாகனங்களின் வகை, மற்றும் அடிசட்ட எண், பொறிஎண் போன்றவற்றின் உண்மைத்தன்மை கண்டறிய மாவட்ட குற்ற பிரிவு காவல் ஆய்வாளர் வேண்டுகோள் படி நானும் மற்றும் காவல் ஆய்வாளர் தூத்துக்குடி குற்ற பிரிவு அவர்களும் இணைந்து கர்நாடக மாநிலம் சென்று மேலே சிறைபிடிக்கப்பட்ட எங்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போலீயான பதிவெண் விபரங்களுடன் மேற்படி வாகனங்களுக்குரிய தாய்பதிவேடு நகல்கள் 23.07.10 தேதியில் கர்நாடக மாநில்த்தில் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அங்கிருந்து அதற்குரிய பி பதிவேடு நகல்கள் பெறப்பட்டு அவற்றினை காவல் ஆய்வாளர் ஆய்விற்காக ஒப்படைத்தேன். மேலும் எங்கள் அலுவலகத்தில் மறுபதிவு செய்யப்படும் போது உண்மைத்தன்மை மேற்படி வாகனங்களுக்கு திரு.கிருஷ்டப்பகவுடா, மற்றும் இன்னொரு நபர் எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியிருந்ததால் மேற்படி நபர்கள் வட்டார போக்குவரத்து அலுவலர்களாக கர்நாடக மாநிலத்தில அலுவலகத்தில் பணியாற்றி உள்ளார்களா என்று அங்குள்ள அலுவலகங்களில் கேட்ட போது அவ்வாறு யாரும் பணிபுரிய வில்லை என்று தெரிவித்தனர். மேலும் இதனை உறுதிபடுத்திகொள்ள கர்நாடக மாநில போக்குவரத்து ஆணையாளர் அவர்களுக்கு கடிதங்கள் வைக்கப்பட்டு அதற்கு பதில் அவ்வாறு யாரும் பணிபுரியவில்லை என்று தரப்பட்ட கடிதத்தினையும் அலுவலகம் மூலமாக காவல் ஆய்வாளர் குற்ற பிரிவு தூத்துக்குடி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நடந்த சம்பவங்கள் அனைத்தையும் சம்பவம் நடந்த 21.04.10 தேதியில் வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடி அவர்களுக்கு தெரிவித்து அவர்களுடைய வழிகாட்டுதலின்படி மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். 27.04.10 தேதியில் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளருக்கு நான் அனுப்பிய புகார்மனு அசா.ஆ.1, கர்நாடக மாநிலத்தில் இருந்து கொடுக்கப்பட்ட KA 02 MC 7309 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.2, KA 02A 1410 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.3, KA 03 MH 4050 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.4, KA 05 MA 9160 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.5, KA 09 MD 321 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.6, KA 03 ME 7948 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.7, KA 03 MH 6078 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.8, KA 03 MH 4078 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.9, KA 03MD 2255 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.10, KA 03MC 9403 வாகனத்திற்கான பி பதிவேடு நகல் அசா.ஆ.11. அசா.ஆ.2 மற்றும் அசா.ஆ.3 ஆவணங்களை பெற ராஜாஜிநகர்

WEBCOPY

வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம் அசா.ஆ.12, அந்த கடிதத்திற்கு அந்த அலுவலகத்தில் இருந்து ஆவணங்களுடன் அனுப்பப்பட்ட கடிதம் அசா.ஆ.13, KA 02 A 9306 என்ற வாகனத்திற்கான பி பதிவேடு நகல் கேட்டு ராஜாஜி நகர் அலுவலகத்தில் கேட்ட போது அங்கிருந்து அந்த வாகனத்திற்கான பதிவு கோலார் தங்க வயல் அலுவலகத்திற்கு 08.12.2000 முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து கொடுக்கப்பட்ட கடிதம் அசா.ஆ.14, அசா.ஆ.3 ஆவணம் கொடுத்ததற்கான கடிதம் அசா.ஆ.15, அசா.ஆ.4 ஆவணம் கேட்கப்பட்டதற்கான வேண்டுகோள் கடிதம் அசா.ஆ.16, அசா.ஆ,5 ஆவணம் கேட்டு கொடுத்த வேண்டுகோள் கடிதம் அசா.ஆ.17, அசா.ஆ.6 ஆவணம் கேட்டு கொடுத்த வேண்டுகோள் கடிதம் அசா.ஆ.18, அசா.ஆ.8 முதல் அசா.ஆ,11 ஆவணங்கள் மற்றும் மற்றொரு வாகனத்தின் அடிசட்ட எண், பொறிஎண் ஆகியவற்றிற்கான ஆவணம் கேட்டு கொடுத்த வேண்டுகோள் கடிதம் அசா.ஆ,19, திரு.எஸ்.ரங்காராவ் மற்றும் எஸ்.கிருஷ்டப்பகவுடா ஆகியோர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்பதற்காக கர்நாடக மாநில போக்குவரத்து ஆணையர் கொடுத்த கடிதம் அசா.ஆ.20, அந்த கடிதத்தை காவல் ஆய்வாளர் குற்றப்பிரிவு அவர்களுக்கு ஒப்படைத்த கடிதம் அசா.ஆ.21. (அரசு தரப்பில் மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr.J.Jeyasuthaher
Judicial Magistrate No.I,
Kovilpatti.

WEB COPY